ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

भक्तिः प्रेयसि संश्रितेषु करुणा शुश्रूषुनम्रं शिरः
प्रीतिर्यातृषु गौरवं गुरुजने क्षान्तिः कृतागस्यपि ।
अम्लाना कुलयोषितां व्रतविधिः सोऽयं विधेयः पुनः
मद्भर्तुर्दयिता इति प्रियसखीबुद्धिः सपत्नीष्वपि ॥

தம் பதியினிடம் பக்தியும், தம்மை ஆசிரயித்த ஜனங்களிடம் கருணையும், பர்த்தா முதலானவர்களுக்குப் பணிவிடைசெய்யும் காலத்தில் வணங்கின சிரஸ்ஸும், கணவனின் ஸஹோதரிகளிடம் பிரீதியும், பெரியோர்களிடத்தில் மரியாதையும், யாராகிலும் குற்றஞ்செய்துவிட்டாலும் அவரிடத்தில் பொறுமையும் குலஸ்திரீகளுக்கு எப்பொழுதும் இருக்கவேண்டும். பின்னும், தம் நாயகனுக்கு தங்களைப்போல் வேறு பத்நிகளிருந்தாலும், அவர்களிடத்தில் பிரியஸகி என்கிற எண்ணத்துடன் அன்பாயிருக்க வேண்டும்.

குடும்பஸ்திரீகளுக்கு இவ்வுலகிலும் பரலோகத்திலும் விசேஷப் பெருமையையும் சிரேயஸ்ஸையும் அடைவதற்குறிய சாஸ்திரீயமான ஸாதனங்களை ஓர் கவி வெளியிடுகின்றார். கீழே கூறியவாறு பதி வீட்டிலுள்ள வேலைக்காரர்கள், மற்றுமுள்ள பெரியோர்கள் முதலானவர்களை பக்தி, கருணை, வணக்கம், மரியாதை முதலிய குணங்களாலாராதிக்கவேண்டும். இவ்விதமிருந்தால் அதுவே என்றும் குறையாத சிறந்த நியமமாகும். இத்துடன் முக்கியமாய் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமுண்டு. அதாவது தம் பதிக்கு தங்களைப்போல் இன்னும் பார்யைகளிருந்தாலும் அவர்களிடமும் அதிக அன்புபாராட்டி ஸகிகளாகப் பாவித்து ஒற்றுமையுடனிருக்கவேண்டும். இவ்விதமிருக்கும் ஸ்திரீகளே இஹபரலோகங்களில் உத்தமமான சிரேயஸ்ஸையடைவார்களென்று நம் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால் இந்த சிறந்த மார்க்கத்தைக் கைவிடாமல் என்றுமனுஷ்டித்து நற்கதியையடையவேண்டுமாயறிவிக்கப்படுகிறது.

சிராத்தம்.

இனி இறந்த நம்பிதுருக்கள் தம் கர்மவசத்தால் பாம்பு, பசு முதலான ஜந்மாவையடைந்திருந்தால் நாம் கொடுக்கும் ஆகாரம் அவர்களுக்கு உபயோகப்படாதே என்று தோன்றும் சங்கைக்கும் விடை கூறுவாம். ஆஜாநஸித்த பிதுருக்களென்று நம்மால் கூறப்பட்ட வஸு ருத்திர ஆதித்தியர் என்கிற இவர்களிடம் கொடுக்கப்படும் திரவியங்களை நம் பிதுருக்கள் எந்தப் பிராணி ரூபமாயிருக்கிறார்களோ, அவைகளுக்குத் தகுந்தபடி மாற்றி பாம்பாயிருந்தால் காற்றாயும் தேவதையாயிருந்தால் அமிருதமாகவும் கொடுக்கிறார்கள். இவ்விதமே,

देवो यदि पिता जातः शुभकर्मनियोगतः ।
तस्यान्नममृतं भूत्वा देवत्वेऽप्युपगच्छति ॥
गन्धर्वे भोग्यरूपेण पशुत्वे च तृणं भवेत् ।
श्राद्धान्नं वायुरूपेण नागत्वेऽप्युपगच्छति ॥
पानं भवति यक्षत्वे राक्षसत्वे तथामिषम् ।
दानवत्वे तथा मांसं प्रेतत्वे रुधिरोदकम् ॥
मनुष्यत्वेऽन्नपानादि नानाभोगरसं भवेत् ।

என்று மத்ஸ்யபுராணத்தில் ஸ்பஷ்டமாய்ச்சொல்லியிருக்கிறது. இவ்வித அபிப்பிராயமே பூர்வமீமாம்ஸையில் லோகவேதாதிகரணம் என்கிற பிரகாணத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்

கிறது. நமது பிதுருக்களுக்குச் சிராத்தகாலங்களில் திரவியங்களைக் கொடுக்கும்பொழுது அவர்களின் நாமாவையும், கோத்திரத்தையும் சேர்த்துச் சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லிக்கொடுத்தால்தான் அவர்களுக்குப் போய்ச்சேரும், இல்லாவிட்டால் கிடைக்கமாட்டாது. இக்கருத்தையே,

नाम गोत्रं पितॄणां हि प्रापकं हव्यकव्ययोः ।

என்று மனுஸ்மிருதியில் ஸ்பஷ்டமாய்க்கூறப்பட்டிருக்கின்றது.

नाम गोत्रं पितॄणां हि प्रापकं हव्यगव्ययोः ।

என்று மற்றொரு ஸ்மிருதியிலும் சொல்லியிருக்கிறார். இவ்விதம் நாம் சொல்லாமல் நம் பிதுருக்களை உத்தேசித்து மேல்கூறிய வஸு ருத்திர ஆதித்தியர்களிடம் அன்னாதிகளைக் கொடுத்தால் அவர்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டு பல விடங்களிலும் அலைந்துபார்தது இன்னாரென்று தெரிந்துகொள்ளாமல் தாங்களே எடுத்துக்கொள்வார்கள். இதை உத்தேசித்தே இதர மதத்திலிருப்பவர்களுடைய பெயர்போலில்லாமல் நம்மவர்கள் பெயருக்குக்கூட வைதிகமான ஸம்ஸ்காராதிகள் செய்துவைக்கிறார்கள். இது யுக்திக்கும் அனுஸரித்திருக்கிறது. காசீ முதலான தூரதேசங்களுக்குப்போன நம்மனிதர்களிருக்குமிடம் நமக்குத் தெரியாமல் போனாலும் அவர்களாலறிவிக்கப்பட்ட விலாஸத்திற்கு நாம் பணங்களை அனுப்பினால் நம் பணம் அங்கு போகாமலே அவர்களுக்கு எப்படி அங்கு கொடுக்கிறார்களோ; மேலும், நாமனுப்பிய நாணயம் செல்லாத தேசாந்திரங்களில் அவர்களிருந்தாலும் அந்ததேசத்து நாணயமாக மாற்றியும் கொடுக்கிறார்களோ, இது விலாஸம் தவறிப்போனால் எப்படி போய்ச்சேராதோ அதுபோலவே தவிர வேறுவிதமல்ல. லௌகிககாரியமே இவ்வளவுநன்றாய் நடக்கும்பொழுது வைதிககாரியங்களுக்கு அற்பமேனும் குறைவு வரவேமாட்டாது. நாம் தவறாக நடத்தினால் அதுவும் தவறிப்போம். இதற்குப் பிறகும் நம் குலத்தில் இறந்தவர்களுக்காக சிராத்தாதிகளில் வேறு

குலத்தில் பிறந்த பிராமணர்களுக்கு எதற்காகச் சாப்பாடுபோடவேண்டுமென்றால் மரித்த நம்மவர்கள் சிராத்த சமயத்தில் பிராமண சரீரத்தில் வருகிறார்களென்று புராணம் முதலான பிரமாணங்களால் தெரியவருகிறது. ஸ்ரீராகவன் யோகவாபி என்றும் ஒரு ஸரஸ்ஸில் தம் பிதுருக்களை யுத்தேசித்து சிராத்தம் செய்யுங்கால் ஸ்ரீ ஜகன்மாதாவான ஸீதாதேவியானவள் பரிவேஷணம் செய்யும் ஸமயத்தில் பயந்து நடுங்கிநின்றதாயும் அக்காலத்தில் ஸ்ரீராகவன் தன் பார்யையைப்பார்த்து "ஏன் பயப்படுகிறாய்? காரணமென்ன" என்று கேட்குங்கால் ஸீதாதேவி "ஸ்வாமி, தங்களுடைய தகப்பனார் திவ்யாபரண பூஷிதராய் பிராமணசரீரத்தில் காணப்பட்டார். மற்றும் இரண்டு பேர்கள் சிறந்த ஆபரணாலங்கிருதர்களாய் பிராமண சரீரத்தில் காணப்பட்டார்கள்" என்று சொன்னதாக பாத்மபுராணத்திற் கூறப்பட்டிருக்கிறது.

शृणु त्वं नाथ यद्दृष्टमाश्चर्यं हि मयेदृशम् ।
पिता तव मया दृष्टः ब्राह्मणांगेषु राघव ॥
सर्वाभरणसंयुक्तौ द्वावन्यौ च तथाविधौ ।
दृष्ट्वा त्रपान्विता चाहमपक्रान्ता तवान्तिकात् ॥

மேலும், நம்மால் நம் பிதுருக்களுக்குச் சிராத்தாதிகளில் நேரில் அன்னாதிகளைக் கொடுக்கமுடியாமல் பிராமணசரீரத்தில் வஸு முதலான பிதுருக்களை ஆவாஹனம் செய்து போஜனாதிகள் செய்துவைப்பதால் பிராமணர்களுக்கும் திருப்தியுண்டாகிறது நம் பிதுருக்களுக்கும் நல்ல திருப்தி ஏற்படுகின்றது. ஒரு கர்மாவால் இரண்டு பிரயோஜனம் ஏற்படுகின்றது. சில காரியங்களில் நமக்குத் திருப்தியில்லாவிட்டாலும் ஒன்றையுத்தேசித்து மற்றொன்றை ஆராதிக்கும்படிதான் நேரும். லௌகிகமான காரியங்களில் இவ்விதமுண்டு. அதாவது, ஒருவன் தன் பத்னியிடம் அதிக வருத்தத்தால் அவளைச் சரியானபடி போஷிக்க வேண்டாமென்று எண்ணியிருந்தாலும் அவள் அதிருஷ்டவசத்

தால் கர்ப்பிணியாயிருந்தால் அவளிடத்திலிருக்கும் துவேஷத்தால் ஆகாராதிகள் சரியாய்க் கொடுக்கவேண்டாம் என்று தோன்றுகிறது. கர்ப்பத்திலிருக்கும் ஸந்ததியை நினைத்தால் புருஷப்பிரஜையாய் ஏற்பட்டால் வம்சம் விருத்தியாகுமென்றும், அதை எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்று தோன்றினால் அதற்கு வேறு வழியில்லாமல் அந்த ஸ்திரீயின் முகமாகவே அன்னபானாதிகளைக் கொடுத்து அந்த கர்ப்பத்தை ரக்ஷிக்கிறாரோ, அதுபோல் ஒருவருக்கு தாகத்திற்கு தீர்த்தம் கொடுக்கிறதாயிருந்தால் பாத்திரமன்றியில் எப்படி கொடுக்கமுடியாதோ பிராமணர்கள் வழியாகவே பிதுருக்களுக்கும் அன்னாதிகளைக் கொடுக்கவேண்டி, பிராமணபோஜனம் ஆவசியகம்தான். இந்த அபிப்பிராயத்தையே மஹாபாரதம் சாந்திபர்வம் வா. 184-வது அத்தியாயத்தில் தர்மபுத்திரர் ஸ்ரீ பீஷ்மரிடம் பிரச்னம் செய்யுங்காலத்தில் அவர் சொல்கின்றதாவது, பெரியோர் மரித்தவர்களை உத்தேசித்து பிராமணர்களிடம் கோ முதலியவற்றைக் கொடுக்குங்காலத்தில் அவர்களை ஈசுவரனாகநினைத்துக் கொடுக்கிறார்களே தவிர வேறுவிதமாயில்லை. ஸர்வேசுவரனான பகவான் எங்குமிருக்கிறபடியால் அவர் நம் பிதுருக்களிடம் சேர்த்துவிடுகிறார் என்று சமாதானம் சொல்லியிருக்கிறார். யாக்ஞவல்க்ய ஸ்மிருதியிலும் இவ்விதமே சொல்லப்பட்டிருக்கின்றது.

(இன்னும் வரும்)

ஸ்ரீ ராமவிஜயம்.

(௬௧-வது பக்கத்தொடர்ச்சி.)

இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அனுமான் இன்றைக்கே பார்த்துப்பேசி சமாதானம் செய்யாவிடில் சீதா தேவியைக் காண்பதரிதாய்விடும். ஸம்ஸ்கிருதத்தில் பேசினால்

இராவணனென்று சங்கித்து சீதை பயப்படுவாள். ஆதலால் அயோத்தியில் பேசும் ஹிந்திபாஷையை உபயோகித்து ஸ்ரீராமனை அவள்காது கேட்கப்புகழ்கிறேன் என்று நிச்சயங்கொண்டவராகி புண்யசீலனான தசரதர் என்ற அரசன் அவருக்குகுணமே உருவெடுத்ததுபோல் ராமன் என்ற ஒரு குமாரன், அவர் லக்ஷ்மணன்என்னும் தம்பியுடனும், பத்னியான சீதையுடனும் பிதுருவாக்கிய பரிபாலனத்திற்காக வனம் வந்தார். கரன் முதலான இராக்ஷஸர்களைப் போக்கி மகரிஷிகளுக்கு க்ஷேமம் கொடுத்தார். ஒரு பொன்மானைத் தேடிப்போய் சீதை என்ற தன் பெண்மானை விட்டுப்பிரிந்தார். சுக்ரீவன் என்னும் வானரராஜன் ஸ்ரீ ராமனுக்கு நண்பனாகி சீதையைத்தேடும்படி அநேக வானரர்களை நான்கு திக்குகளிலும் அனுப்பினார். அதில் ஒருவன் நான் இச்சமுத்திரத்தைத் தாண்டிவந்தேன். இந்த மரத்தினடியில் நான் தேடிவந்த நிதியைப்பார்க்கின்றேன் என்று, மதுரமாய் வசனித்தார். இதைக்கேட்டு ஜானகி ஆச்சரியம் அடைந்தாள். தலையை நிமர்த்தி அம்மரத்தைப் பார்த்தாள். வெகுநாள் கழித்து ஸ்ரீராமனுடைய க்ஷேமசமாசாரம் கேட்கின்றேன் என்று சந்தோஷித்தாள். உதயபர்வத்தில் சூர்யனைப்போல் மரத்தின்மீது வீற்றிருந்த ஹனுமானைப்பார்த்தாள். இவையெல்லாம் ஸ்வப்பனமோ வென்றும் பிரமித்தாள். சிந்தையால் கலங்கும் நமக்குக் கனவு எங்கிருந்துவரும். இது உண்மை யென்று நிதானித்தாள். மரத்தினின்றிரங்கி பயபக்தியுடன் கிட்டிவந்து சீதாதேவியை ஹனுமான் நமஸ்கரித்தார். அமுதினும் இனியகுரலுடன் அம்மணி! தாங்கள் யார்? தங்கள் ஜன்மாவால் அலங்கரிக்கப்பட்டது எந்த ஊர்? முத்துமுத்தாய் தங்கள் கண்களினின்றும் கண்ணீர் வருவானேன்? தங்களுடைய நிலைமையைப்பார்த்தால் ராஜகன்னிகை யென்றும் சக்ரவர்த்தி பார்யையென்றும் தோன்றுகிறது. ராவணனால் எடுத்துவரப்பட்ட ஜனகமகாராஜனது செல்வமான சீதை தாங்களானால் எனக்கு அவசியம் தெரிவிக்கவேண்டும். நான் அந்த லோகமர்தாவைத் தேடியேவந்தேன் என்று அனுமான் கேட்க சீதை ஆம் என்றாள். சீதையினிடமிருந்து அவளது விருத்தாந்

தங்கள் தெரிந்துகொண்ட அனுமான் அம்மா சந்தேகிக்கவேண்டாம். நான் ஸ்ரீராமனுடைய தூதன். ஸகல வேதவேதாந்த பாரங்கதரும் ஸர்வலோகசரண்யனுமான ஸ்ரீராமன் லக்ஷ்மணனுடன் க்ஷேமமாய் விளங்கிவருகிறார் தங்களிடம் க்ஷேமசமாசாரத்தைச் சொல்லி தங்கள் க்ஷேமங்களையும் தெரிந்துவரும்படி என்னை அனுப்பினார். இதைக்கேட்டு சீதை ஆனந்தபரவசமாயினள். அமிருதவர்ஷம்போல் என் நாதனுடைய கல்யாணங்களைத் தெரிந்துசொன்னீரே தங்களுக்கென்ன உபகாரம் செய்யப்போகிறேன் என்றாள். ஒருவேளை ராவணன் வானரரூபத்தோடுவந்து தன்னை வஞ்சிக்கிறானோவென்று சீதை பயந்தாள். ராவணனால் சொல்லிவிடு என்னைத் தபிக்கச்செய்வது அழகில்லை, என்று வாக்கினாலும் சொன்னாள். அம்மா அப்படிச் சந்தேகிக்கவேண்டாம். நான் துஷ்டனான ராவணனில்லை. தங்கள் பாதங்களுக்குப் பணிவிடை செய்யவந்த ஸ்ரீராமதூதனே நான். நான் சுக்ரீவனுக்கு மந்திரி, வாயுபகவானுடைய குமாரன், ஹனுமானென்று எனக்குப் பெயர். சூரியனுக்கில்லாத தேஜஸ்ஸும், சந்திரனுக்கில்லாத குளிர்ச்சியுமுள்ள ராமனுக்கு யான் தூதன். பிருகஸ்பதிக்கில்லாத புத்தியும், மன்மதனுக்கில்லாத ரூபமுமுள்ள தாசரதிக்கு நான் தாஸன். மதுரமான வாணியும், ஸத்தியத்தை ரக்ஷிக்கும் வாணியுமுள்ள ஸ்ரீ ரகுநாதனுக்கு நான் பக்தன் என்றார். சீதை இவ்வார்த்தையைக்கேட்டு சந்தோஷித்து ஸ்ரீ ராமனை எங்கு கண்டீர்கள், ஸ்ரீ ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் எப்படி ஸ்னேகம் ஏற்பட்டது, ராமலக்ஷ்மணர்கள் எப்படியிருப்பார்கள். என்று அனுமானைக்கேட்க, அனுமான் அம்மா! எல்லாம் தெரிந்தவர்களாயிருந்தும் பரீக்ஷைக்காகக் கேட்கிறீர்கள். செந்தாமரைக் கண்ணனான ஸ்ரீ ராகவனே உலகங்களுக்கெல்லாம் ரக்ஷகன். ஸர்வஜனங்களின் அடைக்கலமானவர், தர்மங்களை ஸ்தாபித்தவர், ஸாதுக்களின் ஆதாரவானவர், வில்வித்தையில் கரைகண்டவர், அகன்றமார்பும் நீண்டகைகளும் உள்ளவர், ஸகல ஸாமுத்திரிக லக்ஷணங்களும் பொருந்தினவர். அவர் தம்பியான லக்ஷ்மணனும் இவ்வித ரூபகுணங்

களுள்ளவர். தங்களைத் தேடிக்கொண்டு நாங்களிருக்கும் மலையினருகில் ராமலக்ஷ்மணர்கள் வந்தார்கள். சுக்ரீவனுக்குத் தமையனும், வானரர்களுக்கு அரசனுமான வாலி, ஸாதுவான தம்பி சுக்ரீவனை ஒரே வஸ்திரத்துடன் ராஜ்யத்தைவிட்டு ஓட்டினதுமன்றி, பாரியையான ருமையையும் அநுபவித்துவந்தான். அந்தவாலியை வதம்செய்து ஸ்ரீராமன் கிஷ்கிந்தா ராஜ்யத்தில் சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார். இந்த பரமோபகாரம் செய்த ஸ்ரீ ராகவனுக்குச் செய்தநன்றியைக் காண்பிப்பதற்காகத் தங்களைத்தேடும்படி எங்கள் ராஜன் எங்களையனுப்பினர். தாங்கள் எங்கள் மலைமீதுபோட்ட ஆபரணங்களை ஸ்ரீ ராகவனிடம் சேர்த்ததுபோல் தங்களையும் சேர்த்துப் பார்க்கவேண்டுமென்பதே எங்களுக்கும் எங்கள் ராஜனுக்கும் உண்டான கோரிக்கை. ஜடாயுவின் தமையனுன சம்பாதி தாங்களிவ்விடமிருப்பதாய் அறிந்துசொல்ல, இங்குவந்து தங்களை தரிசிக்கும் பாக்கியத்தை நான் அடைந்தேன். அநேக தூதர்கள் இந்தக்காரியத்தில் ஏவப்பட்டுவந்தாலும் அவர்களெல்லாம் எங்கள் ராஜனுல் ஏவப்பட்டவர்கள். ஸ்ரீராமன் மனப்பூர்வமாய் அழைத்து காரியஸித்தியுடன் வருவேன் என்று என்னையே விசேஷமாய் அனுக்கிரஹித்தார். ஸ்ரீராமனுடைய ஸர்வபாக்கியங்களும் தங்களுக்கு எப்படி பாத்தியமோ அப்படியே தங்களுக்கும் ஸ்ரீராமனுக்கும் கைங்கரியம் செய்வதில் எனக்கே முக்கியமான பாகம். ஸ்ரீ ராமனுடைய பெயரால் பிரகாசமாய் விளங்கும் இம்மோதிரத்தைப் பாருங்கள். கவலையெல்லாம் தீருங்கள், என்று மோதிரத்தை யெடுத்துக் காண்பித்தார். இதைக்கண்டதும் தேவிக்குண்டான ஸந்தோஷத்தை அளவிட முடியுமா? பூர்ணசந்திரனைப்போல் அவளதுமுகம் தெளிந்து விளங்கியது. உத்ஸவக்கூட்டத்தில் தனது ஒரே குழந்தையை விட்டுப்பிரிந்து காணுமல் எங்கும்தேடி பரிதபித்துவரும் தாயானவள் கடைசிபாக தன் குழந்தையை எடுத்து, விசாரித்துக் கொண்டுவரும் ஒருவனிடத்தில் குழந்தையைக்கண்டதும் பரபுருஷனென்றுபாராமல் வாத்ஸல்யத்தினுல் ஆனந்தபரவசமாய்

அந்தக்குழந்தையைத்தொட்டு எப்படிஎடுப்பாளோ; அவ்விதமே மோதிரத்தை அனுமான் கையினின்று எடுத்தாள். ஆசையுடன் வெகுநேரம் அதைப் பார்த்தாள், சிரஸ்மீதுவைத்தாள், கண்களில் ஒத்திக்கொண்டாள். என் பிராணநாதனது அருமைக் கணையாழியே வாராய், என் நாதனைப்பார்ப்பதுபோல் உன்னை பார்க்கின்றேன். எவ்விதம் அவரைவிட்டுப் பிரிந்துவந்தாய். அவரது கையைப் பிடித்தவளானதால் நான் பிரியும்படிநேர்ந்தது. நீயும் அவர் கையில் இருந்ததால் பிரிந்தாய்போலும். அவரது பாணிக்கிரஹணம் செய்தவர்களுக்கு விட்டுப்பிரிவது ஸஹஜமானதோ? எப்படி யிருந்தாலும் உன்னைக் கண்டதில் ஆனந்தமேகொண்டேன்.

(இன்னும் வரும்)

ப. கே. கல்யாணராம சாஸ்திரி.

ஹிந்துமதஸ்தாபன பரிபாலன மசோதா.

சென்னைச் சட்டநிரூபணசபையில் ஸ்தலஸ்தாபன இலாகா மந்திரி கனம் பனகல் ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் இம்மசோதாவைக் கண்டித்து நமது நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தீர்மானங்கள் சட்டசபைக்கு அனுப்பப்பட்டன. பின்னர் இது ஓர் பிரத்தியேக கமிட்டியின் ஆலோசனைக்கு விடப்பட்டு அப்பிரத்தியேக கமிட்டியாரும் இம்மசோதாவை சில திருத்தங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள். அக்கமிட்டியில் ஸ்தானம் வகித்த இருபத்தேழு பெயர்களில் ஒருவர் கிருஸ்துவர் என்பதை நாம் இவ்விடம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இம்மசோதாவினால் தேவஸ்தானங்களுக்கும் தர்மஸ்தாபனங்களுக்கும் புதிய வரிகள் விதிக்கப்படலாமெனத் தெரிகிறது. அவ்வரி விதிக்கும் அதிகாரம் கமிட்டியாருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வருமானமானது புதிதாயேற்

படுத்த உத்தேசித்திருக்கும் தேவஸ்தானக்கமிட்டிகளின் செல வுக்காக உபயோகப்படுமாம்.

பிரத்தியேகக்கமிட்டியார் ஆலயங்களுக்கும் மடங்களுக்கு முள்ள வித்தியாசங்களை நன்குணரவில்லை. மடங்களுக்காக சாக்ஷியங்கொடுத்தவர்களின் வாக்குமூலங்களையும் சரிவர அவர் கள் ஆராய்ச்சி செய்யவில்லை. ஆனால் சிஷ்யகோடிகளுக்கு மடாதிபதிகளிடம் இருக்கும் பக்தியை உத்தேசித்தால் அவர் களுடைய (மடாதிபதிகளின்) நிலைமை வெகு விசேஷமானது என்பதை மாத்திரம் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மதா சாரியர்களாயும் தங்களுடைய எண்ணிறந்தசிஷ்யர்களால் கடவு ளுடைய பிரதிநிதிகளென்றே மதிக்கப்படுகின்றவர்களாயுமான மடாதிபதிகளை ஒரு சில சாமானிய லௌகிகர்களடங்கிய கமி ட்டிக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், அக்கமிட்டிக்குத் தங்கள் வரவு செலவு கணக்குகளை அனுப்பவும் ஏற்பாடு செய்வதா னது நமது மதத்திற்கே தீங்குவிளைவிப்பதாகும். மடத்தின் சொத்துக்கள் அக்கிரமமான வழிகளில் விநியோகமாக்கப்படு வதை நாம் ஆதரிப்பதாக தப்பெண்ணங்கொள்ளலாகாது. சட் டதிட்டங்களைச் செய்து மடாதிபதிகளை பந்தங்களுக்கு உட் படுத்துவதை நாம் அழுத்தமாய்க் கண்டிக்கிறோம். ஒரு சிஷ் யன் தன்னுடைய குருவுக்கு காணிக்கையை அர்ப்பணஞ் செய்யும்போது அதை குரு தன் இஷ்டம்போல் விநியோகி த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் கொடுக்கின்றா னேயொழிய அதற்கு எவ்வித நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தி அர்ப்பணஞ்செய்யவில்லை. தவிர ஓர் மடாதிபதி எம்மதத்தின ரின் குருவோ அம்மதத்தினரின் ஜாதியாசாரம் சம்பந்தப்பட் டவரையில் அவர்களின் தலைவர் (Caste Head) ஆவர். இவ் விஷயங்களை உணராது தனிக்கமிட்டியார் அசல் மசோதாவில் செய்துள்ள புதிய மாறுதல்களையும் நாம் அங்கீகரிக்கமுடிய வில்லை. அசல் மசோதாவில் செய்யப்பட்டிருக்கும் திருத்தங் கள் சிலவற்றை இங்கெழுதுவோம்.

அசல் மசோதாவில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஜில்லாக்கமிட்டிகள் மாத்திரம் ஏற்பட்டிருந்தன. திருத்தப்பட்ட மசோதாவில் ஜில்லாக்கமிட்டிகளில் மேல்விசாரணைக்காக மத்திய சபையொன்று நியமிக்கப்படுமென காணப்படுகிறது அதில் நால்வர் ஸ்தானம் வகிப்பார்கள். இவர்களெல்லோரும் கவர்மெண்டாரால் நியமனம் செய்விக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு உத்தியோகங்களை வகிப்பார்கள். இச்சபையின் தலைவர் மாதமொன்றுக்கு ரூ 1200-ம், மற்ற அங்கத்தினர் மாதம் 1-க்கு ரூ 800-ம் சம்பளம் பெறுவார்கள். அவசியமானல் கவர்மென்டார் இவ்வித மத்திய சபையை ஒன்றுக்கும் மேலும் ஏற்படுத்திக்கொள்ளலாம். மடாதிபதிகளும் சில கோயில்களின் பரம்பரை டிரஸ்டி பாத்தியமுள்ள ஜமீன்தார்களும் மிராசுதார்களும் இந்த மத்தியசபைக்கு ஜவாப்தாரி ஆவார்கள். இவர்கள், அந்த சபைக்கு ஒவ்வொருவருடத்திலும் அடுத்த வருடத்தின் வரவு செலவு திட்டத்தையும் சென்றவருடத்தின் வரவுசெலவு கோஷ்பாராவையும் அனுப்பிவிக்க வேண்டுமாம். தவிர ஒவ்வொரு வருடத்திலும் கவர்மெண்டாரால் நியமனம் செய்விக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்கள் மேலேசொன்ன மடங்களுடையவும் கோயில்களுடையவும் தினசரி வரவு செலவு கணக்குகளைப் பரிசோதனை செய்வார்களாம். இவை யாவும் மடங்களின் பெருமையையும் மடாதிபதிகளின் சிறப்பையும் குறைத்துவிடுமென்று நிச்சயமாய்க்கூறலாம்.

அசல் மசோதாவில் ஆலயங்களிலும் மடங்களிலும் செலவழிந்ததுபோக பாக்கியிருக்கும் சொத்தை சுகாதாரம், கல்வி, போக்குவரவு சாதனங்கள் இவைகளுக்காகச் செலவிட அரசாங்கத்தார் நிர்ப்பந்தப்படுத்தலாம் என்றிருந்த பிரிவை திருத்திய மசோதாவில் மாற்றிவிட்டார்கள்.

ஆயினும் சமூகவாழ்வில் உயர்ந்தபதவியை அடைந்தவர்களும் மதத்தின் தலைவர்களாயுமுள்ள மடாதிபதிகளை அரசாங்க அதிகாரிகளின் ஆட்சிக்கு உட்படுத்தப்பார்ப்பது இராஜதந்திரமாகாது.

ஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சாஸ்திரி.

தர்மம்.

(௯௯-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆனால் இந்த சுலோகத்தால் ஒவ்வொரு யுகத்திற்கும் தர்மம் வெவ்வேறென்றால் அதனதன் ஸ்வரூபம் வேறென்று அர்த்தமாகவில்லையா? பலமற்றவர்களான நாம் கடினமான உபவாஸம் முதலிய வேதவிதியிலேற்பட்ட கன்மங்களை எப்படியனுஷ்டிக்கலாம். ஆனதால் நமக்கு சௌகரியமான தர்மத்தை ஏற்படுத்திக்கொள்ளலாமென்று அர்த்தம் செய்துவிடப்போகிறார்களென்று கொண்டு வியாக்யானம் செய்த மாதவர்,

अत्र अन्यशब्दो धर्मस्य न स्वरूपान्यत्वमाचष्टे किन्तु प्रकारान्यत्वम् ।

இங்கு தர்மம் வேறு என்று சொன்னதினால், தர்மமே வேறு என்று அர்த்தமல்ல. மற்றேதுவெனில் தர்மத்தை நடத்தும் விதம் வேறு. என்று பொருள் என்று கூறிவிட்டு அதற்காக மீமாம்ஸை 6-வது அத்தியாயம், 3-வது பாதத்தில்,

यावज्जीवमग्निहोत्रं जुहुयात्

என்றவிடத்திலுள்ள விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய்ப் பிரமாணம் காட்டுகிறார். அதை இங்கு எடுத்துரைப்பது பெருகுமென இங்கு விஸ்தரிக்கவில்லை. மனு,

वेदोदितं स्वकं कर्म नित्यं कुर्यादतन्द्रितः ।
तद्धि कुर्वन् यथाशक्ति प्राप्नोति परमां गतिम् ॥

வேதத்திற்கூறப்பட்ட தன் ஜாதிக்கேற்பட்ட கன்மத்தை நித்யமும் சோம்பலின்றிச் செய்யவேண்டும். அதை சக்தியுள்ள மட்டும் செய்து பரமகதியை அடைவான். என்ற சுலோகத்தில் வேதத்திற்கூறப்பட்ட கன்மாவை விடக்கூடாதென்றும்

स्वकं என்றதனால் ஜாதிவர்ணப்பிரிவு உண்டென்றும் **यथाशक्ति** என்றதனால் யுகத்திற்குத்தக்கபடி சக்தி குறையுமாதலால் அத்தைக் கொஞ்சம் குறைக்கலாமென்றும் அனுக்ஞை செய்ததாய் ஏற்பட்டது. இதை வைத்துக்கொண்டுதான் பின்வந்த ரிஷிகளும் விஸ்தரித்து யுகத்திற்குத்தக்க தர்மங்களை வகுத்தார்கள். மனுதான் எல்லா ரிஷிகளுக்கும் முந்தியவரென்று முன்னமேயே ஓர் உபன்யாஸத்திற் கூறினேன். மீண்டும் காமசாஸ்திரம் எழுதிய வாத்ஸியாயன மகரிஷியும்,

धर्मार्थकामेभ्यो नमः । शास्त्रे प्रकृतत्वात् । तत्समवायबोधकेभ्यश्चाचार्येभ्यः । तत्संबन्धात् । प्रजापति र्हि प्रजास्सृष्ट्वा तासां स्थितिनिबन्धनं त्रिवर्गस्य साधनमध्यायानां शतसहस्रेणाग्रे प्रोवाच । तस्यैकदेशिकं मनुः स्वायम्भुवो धर्माधिकारिकं पृथक्चकार । बृहस्पतिरर्थाधिकारिकम् । महादेवानुचरश्च नन्दी सहस्रेणाध्यायानां पृथक्कामसूत्रं प्रोवाच।

தர்மம் அர்த்தம் காமங்களுக்கு நமஸ்காரம். சாஸ்திரத்தில் பிரகிருதமானதால் அச்சமயமறிந்த ஆசார்யர்களுக்கும் அதில் சம்பந்தமிருப்பதால் பிரஜாபதியானவர் பிரஜைகளை சிருஷ்டித்து அவர்களின் ஸ்திதிக்குக் காரணமாய் தர்மம் அர்த்தம் காமமென்ற மூன்றுக்கும் ஸாதனத்தை லக்ஷம் அத்தியாயங்களால் முதலிற்கூறினர். அதிலிருந்து ஏகதேசமான தர்மாதிகாரத்தை ஸ்வாயம்புவமனு தனியாய்ப்பிரித்தார். பிருகஸ்பதி அர்த்தசாஸ்திரமென்னும் அதிகாரத்தை பிரித்தார். மகாதேவரது முக்கிய வேலைக்காரரான நந்தியானவர் 1000 அத்தியாயங்களோடு காமசாஸ்திரத்தைப் பிரித்தார் என்றார். இந்தக்காமசாஸ்திரத்தாலும் மனுதான் ஸ்மிருதி கர்த்தாவுக்கு முந்தியவர் என்றேற்படுகிறது. இங்கு பிரகிருதமில்லாத இது நிற்கட்டும். இதனால் மனுவின் அபிப்பிராயப்படி தர்மம் வேறல்லவென்றும் யுகந்தோறும் அதை அனுஷ்டிக்கும் பிரகாரம் மட்டிலும் வேறு

என்றும் தெரிந்துகொள்வோம். அவ்விதமே போதாயனரும்,

यथाकथंचिन्नित्यानि शक्त्यावस्थानुरूपतः ।
येन केनापि कार्याणि नैव नित्यानि लोकयेत् ॥

எப்படியாவது நித்யமான தர்மங்களை சக்தி அவஸ்தைக்குத் தக்கபடி எதனாலாவது செய்யப்படவேண்டுமேயொழிய நித்தியமான தர்மங்களை விடவேகூடாது என்றிருக்கிறார். இது **वेदोदितं स्वकर्म** என்ற மனு வசனத்தை அனுவதிக்கிறது. இதனால் எல்லாம் நமக்கேற்பட்ட தென்னதென்றால் தர்மம் காலத்திரயத்திலும் மாறுகிறதில்லையென்றும் அதை அனுஷ்டிக்கும் முறைமட்டிலும் மாறுகிறதென்றும் பிரகாசமாய் ஏற்பட்டது. இந்தமட்டோடில்லாமல் சாபதண்டனையும் யுகத்திற்குத் தக்கபடி குறைக்கப்பட்டிருக்கிறது.

त्यजेद्देशं कृतयुगे त्रेतायां ग्राममुत्सृजेत् ।
द्वापरे कुलमेकं तु कर्तारं तु कलौ युगे ॥
कृते संभाषणादेव त्रेतायां स्पर्शनेन च ।
द्वापरे त्वन्नमादाय कलौ पतति कर्मणा ॥

கிருதயுகத்தில் ஒருவன் பதிதனாகத்தக்க கன்மாவைச் செய்தால் அவனிருக்கும் தேசத்தையே விட்டுவிட்டு மற்றவர்கள் விலகிவிடவேண்டும் திரேதாயுகத்தில் அப்படிப்பட்டவனிருக்கும் கிராமத்தை விடவேண்டும். த்வாபரயுகத்தில் அவன்பிறந்த குலத்தைமட்டிலும் விலக்கவேண்டும். கலியிலோ வென்றால் அத்தகைய பாபம்செய்த ஒருவனைமட்டும் விலக்கவேண்டும். மற்றும் கிருதயுகத்தில் அப்பதிதனோடு பேசினால் பாபமுண்டு. திரேதாயுகத்தில் பேசினால் பாபமில்லை. அவன் மேல்பட்டால் பாபம். த்வாபரத்தில் மேலிற்பட்டதினால் பாபமில்லை. அவனுடைய அன்னத்தை சாப்பிட்டால் பதிதனுவான். கலியிலோ வெனில் அவன் அன்னத்தை சாப்பிட்டதனால் பதிதனுகமாட்

டான். மற்றும் பதிதனுகத்தக்க கன்மத்தைச் செய்தவன்தான் பதிதன் என்றார். ஆர்யர்களே! நன்கு இங்கு கவனியுங்கள். ஒவ்வொரு யுகத்திற்கும் மேல் போகப்போகக் கடுமை எவ்வள வென்று பாருங்கள், கலியை யுத்தேசித்து எவ்வளவு சௌகரி யம் செய்திருக்கிறார்கள். கலியைப்பற்றி எவ்வளவு தயவுடன் கவனித்திருக்கிறார்கள்.

जितो धर्मो ह्यधर्मेण सत्यं चैवानृतेन च ।
जिताश्चोरैस्तु राजानः स्त्रीभिश्च पुरुषाः कलौ ॥
सीदन्ति चाग्निहोत्राणि गुरुपूजा प्रणश्यति ।
कुमार्यश्च प्रसूयन्ते तस्मिन् कलियुगे सदा ॥

தர்மம் அதர்மத்தினுலும் ஸத்யம் பொய்யாலும் திருடர்களால் அரசர்களும், ஸ்திரீகளால் புருடர்களும் கலியுகத்தில் ஜயிக்கப் பட்டார்கள். அக்னிஹோத்திரங்கள் போயின, குரு பூஜை நசித்தது. அத்தகைய கலியில் குமாரிகளும் பிரஸவிப்பார்கள் என்றார்.

(இன்னும் வரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரீ.

ஸ்ரீ தியாகராஜ சுவாமி சரிதம்.

(முன் தொடர்ச்சி)

இவர், பிரதி ஏகாதசிகளிலும் உபவாஸமிருந்து இராத் திரியில் ஸ்ரீ ராமபிரானுக்கு உத்ஸவம் நடத்துவதில் பல கீர்த் தனங்கள்பாடி, பிருந்தாவன த்வாதசியில் துளசிபூஜை புரிந்து துளஸி விஷயமான பல கீர்த்தனங்கள் சொல்லி இனிது முடிப் பர். இவ்வூர் ஸ்ரீ தர்மாம்பிகை சமேத ஸ்ரீ பஞ்சநதீஸ்வரருக்கு ஸப்தஸ்தல பிரதக்ஷண உத்ஸவத்தில் இவரின் உத்தமசிஷ்யர்

களோடு கீர்த்தனப்பாக்களால் பாடிவரும் வைபவம் ஆதிசேஷனும் வர்ணிக்கமுடியாததானால் அதன் இனிமையான் சொல்லத்தரமோ? வருஷந்தோறும் தன்வீட்டில்செய்யும் ஸ்ரீராமநவமி உத்ஸவத்தில் பிராம்மண சந்தர்ப்பணம்சாலவே சிலமாய்ச் செய்வர். நூதனநூதனமாய்ப் பல கீர்த்தனங்களைக்கேட்க ஆசையதிகமாயுள்ள ஜனங்கள் வருவதைக் கணக்கிடமுடியுமா? இவரின் தமையனாரோ இவர் செய்யும் உத்தமமான இவ் விஷயங்களுக்குப் பல இடையூறுகள் புரிந்துவந்து சில துஷ்டர் களைக்கொண்டு இவர் பூஜித்துவரும் சுவாமிகளைத் திருடிக்காவேரியில் போட்டுவிட, இவர் பிராணரூபமாயிலங்கும் ஸ்ரீராமமூர்த்தியையும் சீதை, லட்சுமணர், அனுமார் இவர்களின் பிரிவைச் சகிக்காது பல கீர்த்தனங்களால்பாடி ஆகாரநித்திரையின்றிப் புலம்பித் தவித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் பகவானிவர் கனவில் தாமிருக்குமிடத்தைத் தெரிவிக்கவே, காவிரியாற்றில் மணலைத்தோண்டித்தேட ஆரம்பித்து ஒரு வருஷத்துக்குப்பின் மூர்த்திகள் நால்வரும் காணப்பட்டார்கள். அவர்களுக்கு உடனே அன்புப்பெருக்கால் திருமஞ்சனம்செய்து கீர்த்தனங் கள்பாடி ஆறுதலையடைந்து பின் தன் தமையனாருக்கு நல்ல புத்தியைப் தரும்பொருட்டுப் பகவானைப் பிரார்த்தித்தனர். அதனால் நல்ல புத்தியமைந்து இவருடன் ராமபஜனம் செய்ய ஆரம்பித்து பிரகாசித்தார்.

ஒருதினம் இவர் வீட்டுக்குள் இவர் மனைவியுடன் ஈச்வரி தர்மாம்பிகை பேசிக்கொண்டிருக்கையில் இவர் திடீரென்று வீட்டுக்குவரவே ஈச்வரி மறைந்ததைப் பார்த்த இவர் தன் மனைவியைப்பார்த்து, "நீ, யாருடன் இப்போது சம்பாஷித்திருந்தாய்" என வினவ, ஒன்றும் பேசாமல் பணிந்து நிற்க, தான் தெரிந்துகொண்டு அதை கீர்த்தனங்களால்பாடி வெளியிட்டிருந்துவந்த சில நாட்களுக்குப் பின் இவர் மனைவி பரகதியடையவே, அப்போது அவரது உத்தமகுணங்களை எண்ணிப் பிரிவாற்றாமையால் கீர்த்தனங்கள் பாடித் துயரத்தை ஆற்றிக் கொண்டு வாழ்ந்துவந்தார். (இன்னும் வரும்)

வ. சி. நா. சிதம்பரம்பிள்ளை.